**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)**
**செயல்முறைகள் ஆணை**
**பிறப்பிப்பவர் :: திரு.பி.இராஜகோபால்.,**

**ந.க.எண்.கே2/496/2020,** **நாள்:30.03.2023.**

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு – கிருஷ்ணகிரி மாவட்டம் – வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம் – ரோகேஷ்கணபதி (திரு) இரா – இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டது – முறையாக பணியமர்த்தி இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை:
1. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் செ.மு.ந.க.எண்.496/2020/கே3, நாள் 07.06.2021.
2. ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.70477/2021/டி1, நாள் 02.06.2022 மற்றும் 09.03.2023.
3. அரசாணை(3ப) எண்.10, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ5)துறை, நாள் 15.02.2023.

----0000----

**ஆணை :-**

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, மாவட்ட ஆட்சியரகம், சத்துணவுப்பிரிவில் ஈப்பு ஓட்டுநராக பணிபுரிந்து பணியிடைக்காலத்தில் 04.01.2020 அன்று மரணமடைந்த (லேட்)ஜெ.இராஜேந்திரன் என்பவரின் மகனும், வாரிசுதாரருமான **திரு.இரா.ரோகேஷ்கணபதி** என்பவரை கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டதை முறையாக பணியமர்த்தி பார்வை (3)–இன்படி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின் அடிப்படையில் **திரு.இரா.ரோகேஷ்கணபதி** என்பவரது பணியினை **இளநிலை உதவியாளராக** பணியில் சேர்ந்த நாளான **"07.06.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை"** செய்து ஆணையிடப்படுகிறது.

இதனை தொடர்ந்து தகுதிகாண்பருவம் நிறைவு காலமான தொடர்ச்சியான மூன்றாண்டில் இரண்டாண்டு காலத்திற்குள் தனியர் இளநிலை உதவியாளருக்கான ஊரக வளர்ச்சித்துறையின் கீழ்க்காணும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டியது.

(...2..)

## DEPARTMENTAL TESTS FOR JUNIOR ASSISTANTS / TYPIST / ASSISTANTS

| Test Code | Name of the Test |
|---|---|
| 008 | Departmental Tests for the staff of Rural Development and Panchayat Raj Department – Tamil Nadu Panchayat Act, 1994 & Rules and Constitution of India |
| 166 | The Panchayat Development Account Test |
| 010 | Departmental Test for the staff of the Rural Development and Panchayat Raj Department – Scheme Administration |
| 172 | The Tamil Nadu Government Office Manual Test |

மேலும் தனியர் 07.06.2021 முற்பகல் முதல் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத்தொகைகள் உரிய விதிகளின்படி பெறத்தகுதியுடையவராகிறார்.

மேற்படி விவரம் தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

[signature] 3/3.

**மாவட்ட ஆட்சியரின்**
**நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),**
**கிருஷ்ணகிரி.**

பெறுதல்
**திரு. இரா. ரோகேஷ்கணபதி,**
இளநிலை உதவியாளர்,
வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம்.
**(வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)/(கிஊ), வேப்பனப்பள்ளி மூலமாக)**

[signature] 20/4/23

<u>நகல்:</u> 1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)/(கிஊ), வேப்பனப்பள்ளி.
2. கே2 முக்கிய ஆணைத்தொகுப்பிற்கு

ஊராட்சி ஒன்றியம் வேப்பனப்பள்ளி
ந.க.எண். 227/2022/அ1 நாள். 12.4.2023

பெறுநர்
திரு. இரா. ரோகேஷ்கணபதி, இளநிலை உதவியாளர், வேப்பனப்பள்ளி
"[illegible]"

ரோகேஷ்கணபதி. இளநிலை உதவியாளர் இரா 19/4/23

[signature] 12/4/23
**வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)**
**வேப்பனப்பள்ளி.**

[signature] 12/4/23

[illegible]

4261543

SL 3340

GOVT D

02 MAR 2023

சுருக்கம் 10653

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கிருஷ்ணகிரி மாவட்டம் - கருணை அடிப்படை பணிநியமனம் - பணியில் இருக்கும் போது காலமான ஈப்பு ஓட்டுநர், திரு.ஜெ.இராஜேந்திரன் என்பவரின் மகன் திரு.இரா.ரோகேஷ்கணபதி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை

அரசாணை (3ப) எண்.10 நாள்:15.02.2023.
சுபகிருது, மாசி 03,
திருவள்ளுவர் ஆண்டு 2054.

2/3

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.கே3/496/2020, நாள் 07.06.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.70477/2021/டி1, நாள் 02.06.2022.

-----

ஆணை:-

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், மாவட்ட ஆட்சியரக சத்துணவு பிரிவில் ஈப்பு ஓட்டுநராக பணிபுரிந்து 04.01.2020 அன்று பணியிடைக்காலமான திரு.ஜெ.இராஜேந்திரன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு.இரா.ரோகேஷ்கணபதி என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி, கருணை அடிப்படையில், கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில், இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 07.06.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மகன் திரு.இரா.ரோகேஷ்கணபதி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 31.10.2020 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 03.02.1994 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 26 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி

பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில், இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.இரா.ரோகேஷ்கணபதி என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 07.06.2021 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு ஊதிய நிலுவைத் தொகைப் பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 23.09.2022-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.16438/ட்டி1/2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.4026684/G/2023, நாள்: 02.02.2023-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம்.
திரு.இரா.ரோகேஷ்கணபதி ,
இளநிலை உதவியாளர் , ஊரக வளர்ச்சிப் பிரிவு, கிருஷ்ணகிரி மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம்.)
மாநிலக் கணக்காயர், சென்னை –18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இரா.[signature]
பிரிவு அலுவலர்.